**S.C.No. 226 / 2018**

**PW1 – Thiru. Susai Arul S/o.**

**11.11.2025**

**(A1 to A3 are present)**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

**நேரம் 12.50 மணி**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சிறிய அளவில் செய்து வருகிறேன். நான் கும்மிடிப்பூண்டி வட்டத்தில் கிட்டதட்ட 100 ஏக்கர் வாங்கி வைத்துள்ளேன் என்றால் இல்லை. எதிரிகளிடம் 3 ஏக்கர் நிலம் வாங்க 2007ல் ஒப்பந்தம் போட்டேன் என்றால் 2 ஏக்கர் 96 சென்ட் வாங்க ஒப்பந்தம் போட்டேன். ரூபாய் 1 லட்சம் முன்பணமாக கொடுத்துவிட்டு ஒப்பந்தத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஒப்பந்தம் போட்டபிறகு எதிரிகள் பணத்தை கட்டுவிட்டு கிரையம் செய்து கொள்ளுங்கள் என்று என்னிடம் கூறினார்கள் என்றால் சரியல்ல. 2011ல் Specific Performance Suit, அசல் வழக்கு எண் 39/2011, நான்காவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் பொன்னேரியில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் 19/5 என்றால் சரிதான். சர்வே எண் 19/5ல் உள்ள சொத்து எதிரிகளுக்கு சொந்தமானது என்றால் அதில் ஒருபகுதியை நான் வாங்க ஒப்பந்தம் போட்டேன். மேற்படி சர்வே எண் 19/5ல் தான் 2 ஏக்கர் 96 சென்ட் வருகிறது என்றால் அதில் மற்ற சர்வே எண்களும் அடங்கியுள்ளது. நான் எதிரிகளின் இடத்திற்கு சென்றேனா என்றால் எதிரிகள் எங்கள் இடத்திற்கு வந்தார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கு நானாக சென்றேனா, அவர்களாக வந்தார்களா என்றால் என்னுடைய நிலத்தில் நான் உழுது கொண்டிருக்கும்போது அவர்களாக வந்தார்கள். எதிரிகளின் வீட்டிருகில் தான் நிலம் உள்ளது என்றால் வீட்டிற்கும் நிலத்திற்கும் சம்பந்தம் இல்லை. எதிரிகளின் வீட்டிற்கும் விவசாயம் நிலமும் அருகில் உள்ளது என்றால் சரியல்ல. 1 கிமீ தூரத்தில் உள்ளது. வழக்கு

நிலுவையில் இருக்கும்போது எதிரிகளுக்கு சொந்தமான இடத்தில் நான், என் மகன், என் மருமகள் அத்துமீறி சென்றோம் என்றால் சரியல்ல. யாரும் அவர்கள் இடத்திற்கு செல்லவில்லை. நான் எதிரிகள் இடத்திற்கு சென்று அத்துமீறி நுழைந்து எதிரிகளை நானும் என் மகனும் சேர்ந்து அடிக்க சென்றோம் என்றால் சரியல்ல. புகார் நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் 3 பேர் மற்றும் பலர் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு சென்று மருத்துவரிடம் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் கூறவில்லை. மருத்துவரிடம் எதிரிகள் மற்றும் 12 பேர் என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் கூறவில்லை. எதிரிகள் 2 பேரும் மூத்த குடிமக்கள் மற்றும் ஒருவருக்கு 35 வயது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த Specific Performance Suit தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளோம். புகாரில் யார் யார் என்னை அடித்தார்கள் என்ற விவரம் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். புகார் கொடுத்தபிறகு நேரடியாக இந்த வழக்கை பதிவுசெய்யாமல் சிஎஸ்ஆர் என புகார் ஏற்பு மனுவாக பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் ஏற்பு மனு கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் ஸ்டான்லி மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒருமுறை விசாரித்தார்கள். மறுவாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் மறுவாக்குமூலம் பதிவுசெய்தார்கள் என்றால் அது தவறு என்றால் எனக்கு ஞாபகமில்லை. அடிபட்டவுடன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு ஸ்டான்லி மருத்துவமனைக்க சென்றேன்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.